<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.83/2022**
Date: 10.11.2025.
பி.வா.சா.1 - திரு. தாசன்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். வழக்கின் வாதியின் கணவர் ஜோசப் 13.05.1996 ம் வருடம் வழக்கு பட்டிகை சொத்தினை வாங்கிய விபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்தின் எல்கை கிழக்கே பிரான்கிஸ் மேரி மனையிடம், தெற்கு வில்லியம் மனை, மேற்கு கெவின் மேரி மனையிடம் , வடக்கு ரோடு என்றால் சரிதான். நான் 2004 ல் சொத்தை கிரையம் வாங்கினேன். தேதி நினைவில் இல்லை. எனது சொத்தின் கிழக்கு எல்கை காலி நிலம் உள்ளது. மேற்கு எல்கை 2.5 அடி பொதுபாதை. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–4 எனது கிரைய பத்திரத்தில் மேற்படி நான் கூறிய எல்கை இல்லை என்றால், அதுவிபரம் எனக்கு நினைவில்இல்லை. தாசன் வாங்கி சொத்தின் கிழக்கு பக்க எல்கையில் பிரான்சிஸ் மேரியின் மனையிடம் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும், நான் குறிப்பிடுவதுபோல 2.5 அடி பாதை என்று குறிப்பிடவில்லை என்றாலும், அதுவிபரம் எனக்கு தெரியாது. எங்களது கிராமத்தில் 2 விதமான சொத்துகள் உண்டு என்றால், சரிதான். அதாவது ஆலயத்திற்கு உள்ளது மற்றும் தனி நபர் சொத்து என்று இரண்டு விதமான சொத்துகள் உண்டு. ஆலயத்திற்கு உள்ள சொத்தில் எழுதி வாங்கும்போது 2.5 அடி பாதை உண்டு என்றாலும், தனி நபர் வாங்கிய

சொத்தில் எந்த எல்கை குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த எல்லை தான் முறையான சட்டப்படியான எல்கை என்றால், சரியல்ல. நான் சொத்தை வாங்கும்போது வீடு கட்ட கட்டிட அனுமதி முட்டம் பஞ்சாயத்தில் பெற்றேன். முட்டம் பஞ்சாயத்தில் கொடுத்து, குருந்தன்கோடு பஞ்சாயத்து யூனியன் வழியாக தான் அனுமதி வாங்க வேண்டும் என்றால், சரிதான். அந்த அனுமதி கட்டிட வரைபடத்தை தாக்கல் செய்திருக்கிறேன். குருந்தன்கோடு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் இருந்து சொத்தினை அளக்க வரும்போது, அவர்களை நான் தடுத்தற்கு காரணம் என்னவென்றால், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் அளக்க முடியாது என்று சொன்னேன். அவர்கள் அளந்து பார்த்ததில் நான் வாதியின் சொத்தில் 1 சென்டு ஆக்கிரமித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால், சரியல்ல. நான் விலைக்கு வாங்கிய 1.5 சென்டில் முழுவதுமாக நான் வீடு கட்டியிருக்கிறேன் என்றால், சரிதான். பொது பாதையில்லாத சொத்தில் எவ்வாறு பாதை உரிமை கேட்கிறேன் என்றால், எல்லா இடத்திலும் அவ்வாறு பாதையுள்ளது. எனது சொத்தின் கிழக்கு பக்கத்தில் அவ்வாறு பாதைக்கு இடம் ஒதுக்கியிருக்கிறேனா என்றால், அங்கு பாதையுள்ளது. வாதி அவருடைய இடத்தில் நான் கட்டிடம் கட்ட முயற்சி செய்தபோது அவர்களை தடுத்ததால் , வாதி மணவாளகுறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். நான் மணவாளகுறிச்சி காவல் நிலையத்தில் எனது இடத்தில் மட்டும் நான் கட்டிடம் கட்டிகொள்ளலாம் என்று கூறி அனுப்பினார்கள் என்றால், சரியல்ல. நான் அடியாட்களுடன் வாதிகளிடம் தரகுறைவாக பேசினேன் என்றால், சரியல்ல. வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் வாதியின் மகன்கள் என்றால், சரிதான். நான் வாதியின் சொத்தை ஆக்கிரமித்து

நான் வீடு கட்டியுள்ளதால் அந்த ஆக்கிரமிப்பை நீக்கி அந்த இடத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால், சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக 2.5 அடி பாதையிருப்பதாக கூறி நான் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.